Teachers with Post-Graduate Qualifications

* 265 Q.—THIRU D. SANTOSHAM: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether " B " Wing Teachers with Post-Graduate qualifications are absorbed into Collegiate service under Rule 10 (*a*) (i) while " A " Wing teachers under similar circumstances are absorbed under Rule 39 (*a*) (i);

(*b*) the reasons for this disparity; and

(*c*) the steps taken to remove such disparity?

பட்ட மேற்படிப்பு கல்வித் தகுதியுடைய ஆசிரியர்கள்

திரு. டி. சந்தோஷம்: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) பட்ட மேற்படிப்பு கல்வித் தகுதியுடைய 'பி' பிரிவு ஆசிரியர்கள் (10) (a) (1) விதிப்படி கல்லூரிப் பணியில் சேர்த்துக் கொள்ளப்படுகையில் அதே நிலையிலுள்ள 'ஏ' பிரிவு ஆசிரியர்கள் 39 (a) (i) விதிப்படி பணியில் சேர்த்துக்கொள்ளப்படுகின்றனரா?

(இ) இந்த வேறுபாட்டுக்கான காரணங்கள் யாவை?

(உ) இத்தகைய வேறுபாட்டைக் களைவதற்கு எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) & (உ) அரசினர் கழக உயர்நிலைப் பள்ளிகளில் பணி புரியும் ஆசிரியர்கள், தற்போது தமிழ்நாடு கல்வி சார்நிலைப் பணியாளர் தொகுதிக்குரிய தனிவிதிகளின் கீழ் வருவதில்லை. ஆகையால் அரசினர் உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்களை போதனாசிரியர்கள், விளக்குநர்கள் மற்றும் உதவிப் பேராசிரியர்களாக நியமனம் செய்வதுபோல் இவர்களையும் நியமிக்க இயலாது. தனிவிதிகளைத் திருத்துவது அரசின் துரிதமான பரிசீலனையில் இருந்து வருகின்றது. அரசினர் கழக உயர்நிலைப் பள்ளிகளில் பணிபுரிந்து வரும் தகுதி பெற்ற ஆசிரியர்களை தற்காலிகமாக போதனாசிரியர்கள், விளக்குநர்கள், மற்றும் உதவிப் பேராசிரியர்களாக நியமிப்பதற்கும், அவர்கள் தங்களது மீன் உரிமையை அரசினர் கழக உயர்நிலைப்பள்ளிகளில் வைத்துக் கொள்வதற்கும் அனுமதி அளிப்பது குறித்தும் அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது.

THIRU D. SANTOSHAM : Sir, after the Board Schools were taken over by the Government, the teachers in those schools are suffering from all the disabilities that are attached to the Government servants. While so, is it not reasonable and just that they should also get the benefits of Government service? May I request the Hon. Minister to see that the examination is concluded very expeditiously and order passed placing them on the same level as ' A ' wing teachers?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அவர்களை அரசினர் உயர்நிலைப் பள்ளிகளில் ஏற்றுக்கொண்ட நோக்கிலிருந்து அரசினர் உயர்நிலைப் பள்ளிகளில் பணியாற்றுகின்றவர்களுக்குக் கொடுக்கின்ற சலுகைகள் இவர்களுக்கும் கிடைக்க வேண்டும். அந்த நோக்கத்தை எடுத்த எடுப்பிலேயே உடனடியாகச் செய்வதற்கு முடியாத பல சங்கடங்களை நாம் ஏற்க வேண்டியிருக்கிறது. ஆகவே இதைப் பொறுத்த அளவிலே முடிவு காணச் செயல்படுகிறோம். இதைப் பரிசீலனை செய்து விரைவிலே எல்லா வசதிகளும் இவர்களுக்கும் கிடைக்கத்தக்க அளவிற்கு முடிவுகள் மேற்கொள்ளப்படும்.

திரு. எம். ராஜா அய்யர் : தலைவரவர்களே, பட்ட மேற்படிப்புப் பட்டங்களைக் கொண்ட சில தலைமை ஆசிரியர்கள் உதவிப் பேராசிரியர்களின் சம்பள ஊதியத்தைவிட அதிகமாகச் சம்பளம் இப்போது பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். அவர்களை இம்மாதிரி "கலீஜியேட் டிபார்ட்மெண்ட்டில்" எடுக்கும்போது, அவர்கள் இப்போது வாங்கக் கூடிய சம்பளம் குறையாதபடி அவர்கள் எடுத்துக் கொள்ளப்படுவார்களா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இதுபற்றித் தனியாக ஆராயப்படும். அந்த அளவிற்கு எடுத்துக்கொள்வதை விட இங்கே இருப்பது நல்லது என்று கருதுகிற சூழ்நிலை ஏற்படலாம். அது தனியாக அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டால், அதுபற்றித் தனியாக ஆராயலாம்.

Postal Tuition by the Unregistered Allopathic Medical Practitioners

* 266 Q.—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether the Government are aware that private medical colleges in Allopathic Medicine which also give postal tuition are being conducted by unregistered Allopathic Medical Practitioners in the State; and

(b) if so, the action proposed to be taken by the Government to avert such practices?